பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஷு மாசி மீ 9 உ வியாழக்கிழமை (21-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர் 86

★ யாழ். மாவட்டத்தில்

# அரச உடைமைகளுக்கு 100 கோடி ரூபா நஷ்டம்!

## பூர்வாங்க மதிப்பீடுகள் தரும் தகவல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 21

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் அரச உடைமைகளுக்கு மட்டும் சுமார் நூறு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக பூர்வாங்க மதிப்பீடுகளில் இருந்து தெரியவருகிறது.

இந்தக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளினால் அரச உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் குறித்து அந்தந்தத் திணைக்களங்கள் மூலம் விவரங்கள் திரட்டப்பட்டன.

இப்பத்தியைந்து அரச திணைக்களங்கள் தமக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய புள்ளி விவரங்களை யாழ். செயலகத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றன.

யாழ். செயலகத்துக்கு நேற்றுவரைக் கிடைத்த புள்ளிவிவர மதிப்பீடுகளின்படி 47 கோடி 58 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

அரச கட்டடங்கள், வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக தளபா

[5 ஆம் பக்கம் பார்க்க]

## புஷ், மேஜர் நிராகரிப்பு

சோவியத்தின் சமாதானத் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நிராகரித்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை திரு. புஷ் நிராகரிப்பதற்கு அமெரிக்காவில் 89 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக கருத்துக் கணிப்பு ஒன்று கூறுகிறது.

—ஈராக் குவைத்தை விட்டு வெளியேறுவதற்கு தேவை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இரு ராணுவ முகாம்கள்

யாழ்ப்பாணம், பெப். 21

திருகோணமலை மாவட்டம் வெருகலிலும், ஈச்சிலம்பத்தையிலும் கடந்தசெவ்வாயன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர்.

கடந்த சனியன்று அலிஒலுவ. கல்லாறு முகாம்களிலிருந்து வந்த படையினரே இப்பகுதிகளில் முகாம்களை அமைத்துள்ளனர். [உ]

## தேடுதலில் ஈடுபட்ட படையினர் மீது தாக்கு

யாழ்ப்பாணம், பெப். 21

மட்டக்களப்பு மாவட்டம் திருகோணமடு முகாமிலிருந்து 300 இற்கும் அதிகமான படையினர் கடந்த திங்களன்று வெளியேறி கதிரவெளி, வாகரை, மாங்கேணி ஆகிய பகுதிகளில் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் படையினர் மீது அன்றைய தினம் ஆண்டான்குளம் — காட்டுமுறிவு வீதியில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை இந்தப் படையினர் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கினர். இதனால் நான்கு சிப்பாய்கள் தமது கால்களை இழந்தனர். [உ]

## இந்திய அமைதிப் படையை கண்டிக்கிறார் பாண்டே!

கொழும்பு, பெப். 21

இலங்கை வடக்கு - கிழக்கு பகுதியில் இடம்பெற்ற இந்திய அமைதிப் படையினரின் நடவடிக்கைகள் அங்குள்ள தமிழ்ச் சமூகத்தின் உள்ளங்களில் நஞ்சைப் பாய்ச்சியது.

இப்படி ஓய்வு பெற்ற இந்திய இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சர்தேஷ் பாண்டே தெரிவித்தார்.

இந்திய அமைதிப்படை ஈழத்தில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட சமயம் சர்தேஷ் பாண்டே

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அதிபர், ஆசிரியர் படையினரால் படுகொலை

### வங்காலையில் ஞாயிறன்று சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 21

மன்னார் மாவட்டம் வங்காலையில் ஆசிரியர்கள் ஐந்துபேர் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் பின்னர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்

எஞ்சிய மூவருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

கடந்த ஞாயிறன்று மன்னார் தீவில் இருந்து சென்ற ஆசிரியர்களுக்கே இக்கதி ஏற்பட்டது.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பென்ஷன் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், பெப்,21

ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாத கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் நேற்று வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்களும் தபால் மூலம் அனுப்பப்பட்டன. [ஓ-3]

## முச்சந்தி முரளி



ஓய்வூதியமும் ஓய்வு எடுத் [illegible]

## முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடித்து 3 சிப்பாய்கள் பலி!

கொழும்பு, பெப். 21

முல்லைத்திவு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் வைத்த கண்ணி வெடிகளில் சிக்கி இலங்கை ஆயுதப்படையினர் மூவர் நேற்று உயிரிழந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

கண்ணி வெடிகளை செயலிழக்கச் செய்வதில் படையினர் ஈடுபட்டிருந்த போது, அவை வெடித்ததில் அம்மூவரும் மரணமானார்கள் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## முஸ்லிம் ஊர்காவலரை புலிகள் தாக்கினர்

நேற்றுக் காலை 7 மணியளவில் ஏறாவூரில் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை.

303 ரக துப்பாக்கி- 1, மகஸின் - 1, ரவைகள் - 69 ஆகியன இத் தாக்குதலின் போது ஆயுதங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் விப வட்டாரங்கள் தெரிவித்தன.

## பேசாலையில தாக்கு; சிப்பாய் உயிரிழப்பு

மன்னார் பேசாலைப் பகுதியில் நேற்று நண்பகல் 11.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். சில ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

பேசாலை முகாமிலிருந்து வந்த படையினர் மீதே ஓலைத்தொடுவாய் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர்.

ரி 81 ரக துப்பாக்கி—ஒன்று. மகஸின் - 5, ஐ. எம். ரவைகள் - 350, 203 ரக பிஸ்டல்- ஒன்று ஆகியனவே விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர், தொழில்நுட்பவியலாளர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, நுண்ணறிவு I. Q. விலை 56.50 அஸ்ரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/5780]

### சேவை

நல்ல தரமான நியாய விலையில் மதிய உணவுப் பார்சல் மற்றும் சிற்றுண்டி வகைகள் இலங்கை கனடியன் அபிவிருத்தி நிதி உதவியுடன் உணவு வழங்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வழங்குகிறோம். தேவையானவர்கள் முன் அறிவித்தல் கொடுத்து சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக்கொள்ளலாம். சைவவித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/5774]

### திருமணம்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத்திருமணங்களை நிறைவேற்ற விடாமுயற்சி தேவை. உங்களுக்கு தேவையான மணமகன், மணமகளை தேடி அலையாது நாட வேண்டிய இடம்: திருவிளங்கம் புதிய மாங்கல்யா மஸ்ரி சேவிஸ், 16/16, வளம்புரம் கொழும்புத்துறை. [15871]

### புத்தகங்கள்

பல்தெரிவு வினாக்கள் மூலம் பௌதீக இரசாயனமும் பௌதீக இரசாயனமும் ஆக்கம் திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் B.Sc. [இரசாயன பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகம்] ம. செல்வரத்தினம் B.Sc. விலை ரூபா 75/- A/L உயர்தர மாணவர்களின் இரசாயனப் பகுதியின் முழுப்பகுதிகளும் அடங்கியது. வெளியீடு, விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5784]

### நீர் நிலையியல்

க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு வரப்பிரசாதம் இந்நூல் கடந்தகாலப் பரீட்சை வினாக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. [ஆக்கியோன் P. வேலாயுதபிள்ளை B.Sc, S. பிரேம்நாத் B.Sc.] போட்டோஸ்ரற் பிரதிகளும் உடன் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்; மக்மிலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [15886]

### விடுபட்ட பெயர்

17 - 2 - 91இல் உதயனில் வெளியான திருமதி புவனேஸ்வரி அரியராஜாவின் மரண அறிவித்தலில் —

அவரின் மைத்துனிகளில் ஒருவரான திருமதி தெட்சணாமூர்த்தியின் [நீதிமன்றம், மன்னார்] பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது என்பதை அறியத் தருகிறோம்.

### நல்லினப் பசு

எமது பால் பண்ணைக்கு நல்லினப் பசுக்கள் தேவை. விற்க விரும்புவோர் உடனடியாக சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், காலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5789]

### தேவை

சமையல் வேலையில் நன்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். பாரத் கபே, 86/1, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [15878]

### பிரத்தியேக வகுப்புகள்

க. பொ. த. [சா] பரீட்சைக்கும் ஏனைய பொதுப் பரீட்சைகளுக்கும் ஆங்கிலம் அனுபவமிக்க கல்லூரி ஆசிரியரால், வீடுகளுக்குச் சென்று கற்பிக்கப்படும். பேச்சுவழக்கு ஆங்கிலப் பயிற்சியும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 181, C/O உதயன். [15882]

### மணமகள் தேவை

எம்மிடம் A/L சித்தி எய்திய 25 வயதிற்கு குறைந்த மணப்பெண்கள் உள்ளார்கள். விரும்புவது பொறியியலாளர், கணக்காளர் தகுதிக்கு தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் வீதி, ஆனைப் பந்தி. [15883]

யாழ். இந்து 32 வயது நிரம்பிய, வருகிற மாதம் U. K இல் இருந்து வர இருக்கும் பட்டதாரி, I. C. M. A. எக்கவுண்டனாக வேலைசெய்யும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி 4 ஆம் பாதம் உயரம் 5' 5'' தொடர்பு: 328, நாவலர் வீதி, ஆனைப் பந்தி, ABCDE விவாகப் பொருத்துனர். [15884]

## ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 21

இலங்கைவங்கி யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் நேற்று முன்தினம் ஓய்வூதியர்களுக்கு பிரத்தியேக கருமபீடம் ஒன்றில் தடங்கல் ஏதுமின்றி ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. [இ1

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

## தொழிலாளர் கல்விப் பாடநெறி - 1991

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 [தரம் 8] கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க / அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் [விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட] ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விவரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-க்கான காசுக்கட்டளையை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது சுய விலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ x 10செ.மீ அளவினதான கடித மேலுறையுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 13 - 03 - 1991.**

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுக்கூடாகவும், நேர்முகத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

**எழுத்துத்தேர்வு: 23 - 03 - 1991 சனிக்கிழமை மு. ப. 9 00 மணிக்கு நடைபெறும்.**

**குறிப்பு:**

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

[சி-5790] பதிவாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்டோருக்கு இலவச பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப் 21

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொழில் வாய்ப்புப் பெற உதவும் வகையில் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சிநெறி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த பயிற்சிநெறிக்கு தேவையான உதவிகளை ஆஸ்திரேலியா தூதுவராலயம் வழங்கி உள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் இந்த பயிற்சிநெறி இலவசமாக நடத்தப்படவிருக்கிறது.

விதவைகள், தாய், தந்தையரை இழந்த அநாதைப் பிள்ளைகள், அங்கவீனர் இந்தப் பயிற்சிநெறியில் சேர்க்கப்படவுள்ளனர். [இ-3]

## மரண அறிவித்தல்

### திரு. த. இராசலிங்கம்

[ உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ]

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பத்மலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராசேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா ஆசிரியர், சங்கராசா, திரு. துரைராசா ஆசிரியர், திருமதி மீனாட்சியம்மா சாம்பசிவம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற டாக்டர் சாம்பசிவம், திரு. த. தருமராசா ஆகியோரின் மைத்துனரும், திரு. செ. செல்வலிங்கம் [ கிராம சேவையாளர் ], செ. சந்திரலிங்கம் [ஜேர்மனி], செ. ஆனந்தலிங்கம் [கனடா], த. யோகலிங்கம் [சுங்கத் திணைக்களம், கொழும்பு], து. சத்தியலிங்கம் [மொறட்டுவ பல்கலைக்கழகம்], த. அசோகலிங்கம் [யாழ். பல்கலைக்கழகம்], செ. சோதிலிங்கம் [யாழ். பல்கலைக்கழகம்], செல்வி இரஞ்சினிதேவி துரைராசா [ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்] ஆகியோரின் சிறிய தந்தையாரும், திரு. வே. தம்பிமுத்துவின் மருமகனும், திரு. ச. ஸ்ரீதரன் [மக்கள் வங்கி, மாங்குளம்], திரு. மா. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மாமனாரும், டாக்டர் சு. வல்லிபுரம், திரு. இ. கந்தவனம் [பொதுச் சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற இ. இரத்தினராசா ஆசிரியர் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 21-2 91 வியாழக்கிழமை [இன்று] பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

குடும்பத்தினர்

'ராஜ்மகால்',
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

தகவல் : செ. சோதிலிங்கம்

[15699]

### திருமதி சிவபாக்கியம் செல்வநாயகம்

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் செல்வநாயகம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சோ. செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி, வேதநாயகம், பேரின்பநாயகம் [மாபிள்ஸ்], காலஞ்சென்ற உலகநாயகம், முத்துநாயகம் [சுவதி], சதாசிவநாயகம் [கொலண்ட்], செல்வி சிவயோகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பி [மட்டுவில்], வள்ளிநாயகி [யாழ்ப்பாணம்], தவமணி [வல்வெட்டி], செல்வலட்சுமி [மல்லாகம்], விமலாதேவி [மண்கும்பான்] ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-2-91 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1-00 மணியளவில் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :
பேரின்பநாயகம்

பறாளாய் வீதி,
சுழிபுரம். [15662]

# போதிய கிராமசேவையாளர் இன்றி வடமராட்சி கிழக்கு மக்கள் பாதிப்பு

தாளையடி, பெப். 21

வடமராட்சிக் கிழக்கில் உள்ள 17 கிராம சேவையாளர்கள் பிரிவில் 5 கிராம சேவையாளர்கள் பிரிவுகள், கிராமசேவையாளர்கள் இன்றி வெற்றிடமாக உள்ளன.

சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் 5 கிராம சேவையாளர்கள் ஓய்வுபெற்றதை அடுத்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

முள்ளியான், சுண்டிக்குளம், உடுத்துறை. செம்பியனபற்று தெற்கு, செம்பியன்பற்று வடக்கு ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளே வெற்றிடங்களாகவுள்ளன.

இந்தப் பிரிவுகளின் கடமைகளையும், அயற்பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களே கவனித்து வருகின்றார்கள்.

அதேவேளை மேலும் இப்பகுதியிலிருந்து 5 கிராம சேவையாளர்கள், பருத்தித்துறைப் பகுதிககு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கும் விண்ணப்பித்துள்ளார்கள்.

[இ-144]

## சைக்கிள் களவு அதிகரிப்பு

மானிப்பாய் வைத்திய சாலைப் பகுதியில் சைக்கிள் களவு அதிகரிக்கிறது.

சைக்கிள்களை பாதுகாப்பாக விடுவதற்கான வசதி இல்லாததே சைக்கிள் களவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தெல்லிப்பளை ஆஸ்பத்திரியும் மானிப்பாயில் இயங்குவதால் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சைக்கிள்கள் ஆஸ்பத்திரிப் பகுதியில் பெரும் அளவில் விடப்படுகின்றன. [இ]

# சிவன்கோவிலும் தப்பவில்லை

[முந்திய தொடர்ச்சி]

ஆலயத்தினுள் நிகழ்ந்த குண்டு வீச்சுக்களைத் தொடர்ந்து, அந்த அழகிய முத்துமாரி அம்மன் கோயிலின் கவர்ச்சியான தோற்றம் செங்கோட்டுப் புழுதியும், கரும்புகையும் படிந்து அழுகு மண்டிக் கிடந்தது.

எழுந்தருளி வாகனங்கள், கை உடைந்தும், கால் உடைந்தும் உருக்குலைந்து போய் இருந்தன! அழகிய மூன்று சித்திரத் தேர்களும் பாதிப்புக்களுடன் சிரழிந்து போய் இருந்தன. பல்லாயிரக்கணக்கான ஓடுகள் வெடித்துச் சிதறிப் பலரின் பாதங்களைப் பதம்பார்த்துவிட்டன. தெற்குப்புற உட்சுற்றுப் பிரகாரத்தின் சுவர் இடிந்து போய் இருந்தது.

வல்வைப் புயல்

பகுதி: ஆறு

கோயில் வீதியைச் சுற்றிப் பார்த்து வரும்போது என் கண்கள் கலங்கக்கொண்டு வந்தன. அப்பொழுது ஆலயத்தின் தர்மகர்த்தா சபையைச் சேர்ந்த மணியண்ணா, திரு. கந்தசாமித்துரை, திரு. குழந்தைவடிவேல் ஆகியோர் வந்தனர்.

"என்ன மாதிரி இருந்த கோயிலை, இந்தச் சிங்களவர் இப்படிச் சீழித்துவிட்டார்கள்... அம்பாளைச் சிலேசுப்பட்டவ இல்லைப் பாருங்கோ... நாளைக்கு அவங்கள் படப்போகிற பாட்டைப் பாருங்கோ... இந்தக் கோயிலைப் பழையபடி புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்கிறதென்றால் குறைந்தது 3 மகோடியாவது தேவை பாருங்கோ... இவ்வளவு கொடுமையை உலகத்துக்கு அம்பலப்படுத்த வேணும் பாருங்கோ..."

பொதுவாகவே பொறுமை இழந்து பேசும் மணியண்ணா இன்று மேலும் கொதிப்புடன் இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

"கோயிலுக்கு முன்னால் உள்ள மோர் மடத்துக்கு அருகில் குண்டு விழுந்ததும் 15 அடி உயரத்திற்கு நெருப்புக்கோளமாக இருந்தது... அதைத்தொடர்ந்து பெருத்த சத்தத்துடன் மோர் மடம் வெடித்துச் சிதறியது. இதிலை மட்டும் 20 குண்டுகள் வரை போட்டிருப்பாங்கள்..."

முதல் நாள் குண்டு போட்ட பொழுது நடைபெற்ற சம்பவத்தை குழந்தைவடிவேல் விபரித்தார்.

இந்த நாட்டில் மத சுதந்திரமும், மத வழிபாட்டுத் தலங்களுக்குமான பாதுகாப்பும் எந்த அளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

### சிவன் கோவிலில்

அம்மன் கோவிலிலிருந்து அதன் வலது பக்கத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் மிக்க வைத்தீஸ்வரன் கோயிலை நோக்கி நடக்கின்றேன்.

ஐம்பூதங்களுக்கும் அதிபதியாய் அண்டசராசரங்களே தொழுது பணியும் முழுமுதற் கடவுளான சிவனுக்கே இந்தக் கதியா?

வல்வைச் சிவன் கோயிலின் உள்ளும், புறமும் வெடிகுண்டு நாற்றங்கள், பெற்றோல் ஆவியின் மணம், எரிகுண்டுகள் போடட்டு எரிந்த கோயிலின் சிரழிந்த அமைப்பு என்பன அந்த ஆலயத்தைப் பார்ப்பவர்களின் நெஞ்சையே பிழிந்து எடுத்துவிடும்.

ஆலய வாசலில் சுப்பர் அண்ணா என்று அழைக்கப்படும் ஒரு வயோதிபர் கண்ணீர் விட்டு, நெஞ்சுருக நின்று திருஞானசம்பந்தர் பாசுரம் ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தார்.

கோயிலின் உள் நுழைவாயிலையும் தாண்டி 2ஆம் சுற்றுப் பிரகாரத்தை அடைந்தேன். [இக்கோவிலில் மூன்று சுற்றுப்பிரகாரங்கள் உள்ளன. 2ஆம் சுற்றுப் பிரகாரத்திலேயே வசந்த மண்டபம் அமைந்திருந்தது! முற்றிலும் பொழி கற்களால் அமைந்த சுமார் 30 அடி அகல முகப்புத் தோற்றத்தைக்கொண்டு, இலங்கையிலேயே மிகவும் பெரிய வசந்த மண்டபம் என்ற சிறப்பையும் பெற்றிருந்தது.

வசந்த மண்டபத்தின் முன் பாரிய குண்டு விழுந்து வெடித்ததில், பெரிய குழி ஒன்று உண்டாகியிருந்தது. மேலே பலமான தேக்கு மரங்களினால் அமைக்கப்பட்ட கூரை இடிந்து மரங்களும், ஓடுகளும் சிதறி இருந்தன... அவற்றை ஒருவாறு தாண்டி வசந்த மண்டபத்தை எட்டிப் பார்த்தேன். அந்த அழகிய

வல்வை

ந. அனந்தராஜ்

மண்டபம் உருக்குலைந்து, கற்கள் வெடித்து விழும் தறுவாயில் இருந்தன.

கோயிலின் உட்சுற்றுப் பிரகாரத்தின் கூரைகளும், பத்தாயிரத்துக்கும் அதிகமான ஓடுகளும் சிதறி உடைந்து போய் இருந்தன. கோயில் உட்சுற்றுப் பிரகாரம் எங்கும், உடைந்த மின் குமிழ்களின் துண்டுகளும், ஓட்டுத் துகள்களும் சிதறிக் கிடந்தன.

கண்களில் இருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி கோயிலைவிட்டு வெளியேறி, தென்கிழக்கு மூலையில் நின்று அந்த அழகிய இராஜகோபுரத்தையும், அதன் எதிரே உடைந்து, சிதறியுள்ள இரண்டு மடங்களையும், தெப்பக் குளத்தையும் பார்க்கின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்து சிவாகம முறைப்படி ஆறுகாலமும் பூசைகள் நடைபெற்று வரும் இந்த ஆலயம், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது.

(வளரும்)

# இஸ்ரவேல் மீது ஈராக்கின் 36 ஆவது தாக்குதல்

இஸ்ரவேல் மீது ஈராக் நேற்று 36ஆவது தடவையாக ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இஸ்ரவேலின் மத்திய பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஸ்கட் ஏவுகணையை அமெரிக்காவின் பேட்ரியட் ஏவுகணை நடுவானில் வைத்து அழித்ததாகவும் அதன் சிதறல்கள் பூமியில விழுந்ததால் உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## பதில் அளிக்க ஈராக்கிற்கு காலக்கெடு எதுவும் இல்லை

சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் தெரிவித்த சமரச யோசனைக்கு பதிலளிக்க ஈராக்குக்குக் காலக்கெடு விதிக்கப்படவில்லை.

எனினும் இன்னும் இரண்டு தினங்களில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனிடம் இருந்து பதில் கிடைக்கலாம் என்று எதிர்பார்ப்பதாக சோவியத் வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி சதாம் ஹுசேனிடமிருந்து பதில் கிடைக்கும் வரை தமது சமரசயோசனையின் விவரங்களை பகிரங்கமாக்காது இரகசியமாக வைத்துக் கொள்ளும்படி அமெரிக்க ஜனாதிபதி புஷ், பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட், பிரிட்டிஷ் பிரதமர் மேஜர், ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் ஹோல் ஆகியோரை சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ் கேட்டுள்ளார்.

## தெஹ்ரானில் சந்திப்பு

பக்தாத் திரும்பும் வழியில் ஈராக் வெளியுறவு அமைச்சர் தரீக் அஸீஸ் ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் ஜனாதிபதி ரஃப்சன்ஜானியைச் சந்தித்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ரஃப்சன்ஜானி டெலிவிஷன் உரை ஒன்றில் "குவைத்தில் இருந்து தமது படைகளை விலக்கிக் கொள்ளப் போவதாக ஈராக் அறிவித்திருப்பதை வெறும் பேச்சாக எடுத்துக் கொள்ளக்கூடாது" என்று சொன்னார்.

செஞ்சிலுவைச் சங்கம் — யாழ்ப்பாணம்
சங்க உறுப்பினர்களுக்கான

அறிவித்தல்

1. மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆந் திகதி நடைபெறவுள்ளது.
2. 1991/92ஆம் ஆண்டுக்கான சங்க அலுவலர், செயற்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட விரும்பும் உறுப்பினர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் வேட்புமனுப் படிவத்தில் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யுமபடி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். வேட்புமனுக்கள் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை காலை 10.00 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சங்க அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். படிவம் ஒன்றுக்கு ரூபா 5 செலுத்தி வேட்பு மனு படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
   வேட்பு மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் 1991-03-18ஆம் திகதி பிற்பகல் 01 மணி தொடக்கம் 02 மணி வரை ஏற்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.
3. பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்பட இருக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தல் 1991-03-10ஆம் திகதிக்கு முன் கிடைக்க வேண்டும்.
4. நடப்பாண்டிற்கான தங்கள் சந்தாப் பணத்தை இதுவரையும் செலுத்தாத உறுப்பினர்கள் 1991-03 10ஆம் திகதிக்கு முன்பதாக செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கௌரவ செயலாளர்:
செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். பிரிவு,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[இ-5792]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## MISS R. J. MANN
## செல்வி ரூத் ஜெயமணி மேன்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ரூத் ஜெயமணி மேன் [Directress Further Education - Uduvil Girls' College, Formerly Principal - Uduppiddy Girls' College, and Methodist Girls' College Point pedro] 18 - 02 - 91 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற திரு. திருமதி J. R. மேன் அவர்களின் அன்புப் புதல்வியும் வயலெற், டெய்சி ராஜா, புளோறி, காலம் சென்ற பாக்கியம் குணரத்தினம், சாமுவேல், காலம் சென்ற டாக்டர் ஜெகதாஸ், மணி, ராணி சேவகன், சோதி ராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை 22-02-91 மாலை 3 மணியளவில் கனகதையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
Sam Mann

"வயலெற் கொட்டேஜ்"
சாமுவேல் மேன் வீதி,
உடுவில். [15887]

## கணபதிப்பிள்ளை சதாசிவம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சதாசிவம் காலமானார். இவர் அன்னமுத்துவின் அன்புக்கணவரும் கணபதிப்பிள்ளை, பெரியநாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், மருதப்பு, காமாட்சி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவராசா [ஜேர்மனி], சிவானந்தராசா, சிவஞானராசா, சிவகணேசன், சிவபாலன், சிவகுமார் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநிதி [ஜேர்மனி], கோமதி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கனகசபை, சின்னத்துரை, கண்ணையா [ஆசிரியர்], சண்முகம், நாகம்மா, காலஞ்சென்ற இராசம்மா, யோகம்மா, அமராவதி [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். இவரது நல்லடக்கம் 21-02-91 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மணற்காடு மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அன்னமுத்து (மனைவி)

புங்குடுதீவு. [15661]

## திருமதி
## கைலாசபிள்ளை தங்கரத்தினம்

காலம் சென்ற மாப்பியன் மில் உரிமையாளர் கைலாசபிள்ளை அவர்களின் மனைவி திருமதி தங்கரத்தினம் 20-2-1991 புதன் கிழமை சிவபதம் அடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும், யோகரட்ணம், தாமரட்ணம், அமிர்தரட்ணம், பஞ்சரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபாபதி, புவனராணி, தனபாலசுங்கம், விலாசனி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜனி [சிறிகரன்], ரஞ்சித் [பூம்பா], ரகுராஜ், ஜெயராஜ், நிமலராஜ், ஜெயந், சுரேந், சிவானுஜா, பிரகலாத் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ரகுராஜின் பூட்டியும் ஆவார்.

சயக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பஞ்சரட்ணம்

M.K, பஞ்சரட்ணம்
"யோகஸ்பதி"
மானிப்பாய் 15660

# போதிய கிராமசேவையாளர் இன்றி வடமராட்சி கிழக்கு மக்கள் பாதிப்பு

தாளையடி, பெப். 21

வடமராட்சிக் கிழக்கில் உள்ள 17 கிராம சேவையாளர்கள் பிரிவில் 5 கிராம சேவையாளர்கள் பிரிவுகள், கிராமசேவையாளர்கள் இன்றி வெற்றிடமாக உள்ளன.

சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் 5 கிராம சேவையாளர்கள் ஓய்வுபெற்றதை அடுத்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

முள்ளியான், சுண்டிக்குளம், உடுத்துறை, செம்பியன்பற்று தெற்கு, செம்பியன்பற்று வடக்கு ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளே வெற்றிடங்களாகவுள்ளன.

இந்தப் பிரிவுகளின் கடமைகளையும், அயற்பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களே கவனித்து வருகின்றார்கள்.

அதேவேளை மேலும் இப்பகுதியிலிருந்து 5 கிராம சேவையாளர்கள், பருத்தித்துறைப் பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கும் விண்ணப்பித்துள்ளார்கள். [இ-144]

# சைக்கிள் களவு அதிகரிப்பு

மானிப்பாய் வைத்திய சாலைப் பகுதியில் சைக்கிள் களவு அதிகரிக்கிறது.

சைக்கிள்களை பாதுகாப்பாக விடுவதற்கான வசதி இல்லாததே சைக்கிள் களவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தெல்லிப்பளை ஆஸ்பத்திரியும் மானிப்பாயில் இயங்குவதால் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் ஆகியோரது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சைக்கிள்கள் ஆஸ்பத்திரிப் பகுதியில் பெரும் அளவில் விடப்படுகின்றன. [இ]

# சிவன்கோவிலும் தப்பவில்லை

[முந்திய தொடர்ச்சி]

ஆலயத்தினுள் நிகழ்ந்த குண்டு வீச்சுக்களைத் தொடர்ந்து, அந்த அழகிய முத்துமாரி அம்மன் கோயிலின் கவர்ச்சியான தோற்றம் செங்கோட்டுப் புழுதியும், கரும்புகையும் படிந்து அழுகு மண்டிக் கிடந்தது.

எழுந்தருளி வாகனங்கள், கை உடைந்தும், கால் உடைந்தும் உருக்குலைந்து போய் இருந்தன! அழகிய மூன்று சித்திரத் தேர்களும் பாதிப்புக்களுடன் சேதமுற்று போய் இருந்தன. பல்லாயிரக்கணக்கான ஓடுகள் வெடித்துச் சிதறிப் பலரின் பாதங்களைப் பதம்பார்த்துவிட்டன. தெற்குப்புற உட்சுற்றுப் பிரகாரத்தின் சுவர் இடிந்து போய் இருந்தது.

## வல்வைப் புயல்
### பகுதி: ஆறு

கோயில் வீதியைச் சுற்றிப் பார்த்து வரும்போது என் கண்கள் கலங்கிக்கொண்டு வந்தன. அப்பொழுது ஆலயத்தின் தர்மகர்த்தா சபையைச் சேர்ந்த மணியண்ணா, திரு. கந்தசாமித்துரை, திரு. குழந்தைவடிவேல் ஆகியோர் வந்தனர்.

"என்ன மாதிரி இருந்த கோயிலை, இந்தச் சிங்களவர் இப்படிச் சீரழித்துவிட்டார்கள்... அம்பாள் சகிலே சுப்பட்டவ இல்லைப் பாருங்கோ... நாலைஞ்சு அவங்கள் படப்போகிற பாட்டைப் பாருங்கோ... இந்தக் கோயிலைப் பழையபடி புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்கிறதென்றால் குறைந்தது 3 கோடியாவது தேவை பாருங்கோ... இவ்வளவு கொடுமையை உலகத்துக்கு அம்பலப்படுத்த வேணும் பாருங்கோ..."

பொதுவாகவே பொறுமை இழந்து பேசும் மணியண்ணா இன்று மேலும் கொதிப்புடன் இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

[illegible] உள்ள மோர் மடத்துக்கு அருகில் குண்டு விழுந்ததும் 15 அடி உயரத்திற்கு நெருப்புக்கோளமாக இருந்தது... அதைத்தொடர்ந்து பெருத்த சத்தத்துடன் மோர் மடம் வெடித்துச் சிதறியது. இதிலை மட்டும் 20 குண்டுகள் வரை போட்டிருப்பாங்கள்..."

முதல் நாள் குண்டு போட்ட பொழுது நடைபெற்ற சம்பவத்தை குழந்தைவடிவேல் விபரித்தார்.

இந்த நாட்டில் மத சுதந்திரமும், மத வழிபாட்டுத் தலங்களுக்குமான பாதுகாப்பும் எந்த அளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

## சிவன் கோவிலில்

அம்மன் கோவிலிருந்து அதன் வலது பக்கத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் மிக்க வைத்தீஸ்வரன் கோயிலை நோக்கி நடக்கின்றேன்.

ஐம்பூதங்களுக்கும் அதிபதியாய் அண்டசராசரங்களே தொழுது பணியும் முழுமுதற் கடவுளான சிவனுக்கே இந்தக் கதியா?

வல்வைச் சிவன் கோயிலின் உள்ளும், புறமும் வெடிகுண்டு நாற்றங்கள், பெற்றோல் ஆயிலின் மணம், எரிகுண்டுகள் போட்டு எரிந்த கோயிலின் சீரழிந்த அமைப்பு என்பன அந்த ஆலயத்தைப் பார்ப்பவர்களின் நெஞ்சையே பிழிந்து எடுத்துவிடும்.

ஆலய வாசலில் சுப்பர் அண்ணா என்று அழைக்கப்படும் ஒரு வயோதிபர் கண்ணீர் விட்டு, நெஞ்சுருகி நின்று திருஞானசம்பந்தர் பாசுரம் ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தார்.

கோயிலின் உள் நுழைவாயிலையும் தாண்டி 2ஆம் சுற்றுப் பிரகாரத்தை அடைந்தேன். [இக்கோவிலில் மூன்று சுற்றுப்பிரகாரங்கள் உள்ளன. 2ஆம் சுற்றுப் பிரகாரத்திலேயே வசந்த மண்டபம் அமைந்திருந்தது] முற்றிலும் பொழி கற்களால் அமைந்த சுமார் 30 அடி அகல முகப்புத் தோற்றத்தைக்கொண்டு, இலங்கையிலேயே மிகவும் பெரிய வசந்த மண்டபம் என்ற சிறப்பையும் பெற்றிருந்தது.

வசந்த மண்டபத்தின் முன் பாரிய குண்டு விழுந்து வெடித்ததில், பெரிய குழி ஒன்று உண்டாகியிருந்தது. மேலே பலமான தேக்கு மரங்களினால் அமைக்கப்பட்ட கூரை இடிந்து மரங்களும், ஓடுகளும் சிதறி இருந்தன... அவற்றை ஒருவாறு தாண்டி வசந்த மண்டபத்தை எட்டிப் பார்த்தேன். அந்த அழகிய

வல்வை
**ந. அனந்தராஜ்**

மண்டபம் உருக்குலைந்து, கற்கள் வெடித்து விழும் தறுவாயில் இருந்தன.

கோயிலின் உட்சுற்றுப் பிரகாரத்தின் கூரைகளும், பத்தாயிரத்துக்கும் அதிகமான ஓடுகளும் சிதறி உடைந்து போய் இருந்தன. கோயில் உட்சுற்றுப் பிரகாரம் எங்கும், உடைந்த மின் குமிழ்களின் துண்டுகளும், ஓட்டுத் துகள்களும் சிதறிக் கிடந்தன.

கண்களில் இருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்தபடி கோயிலைவிட்டு வெளியேறி, தென்கிழக்கு மூலையில் நின்று அந்த அழகிய இராஜ கோபுரத்தையும், அதன் எதிரே உடைந்து, சிதறியுள்ள இரண்டு மடங்களையும், தெப்பக் குளத்தையும் பார்க்கின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்து சிவாகம முறைப்படி ஆறுகாலமும் பூசைகள் நடைபெற்று வரும் இந்த ஆலயம், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேங்கைகளின் புகழுடல்களுக்கு
# பல இடங்களிலும் மக்கள் அஞ்சலி

## அடம்பனில் இறுதிக்கிரியைகள்

பூநகரி, பெப். 21

மன்னார், கொண்டைச்சிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட அதிரடித்தாக்குதல்களில் வீரமரணம் அடைந்த 5 போராளிகளான மேஜர் ராதாரவி [முழங்காவில்], மேஜர் சூரி [கிளிநொச்சி], கப்டன் துரைமணி [செட்டிகுளம்], லெப்டினன்ட் ஏகாம்பரம் [முருங்கன்], வீரவேங்கை ஞானமுத்து [மன்னார்], ஆகியோரின் புகழுடல்கள் கடந்த திங்கட்கிழமை இறுதி அஞ்சலிக்காக பூநகரி வாடியடியில் வைக்கப்பட்டிருந்தன.

பூநகரி வட்ட அவைத்தலைவர் தரு.கே.ரீ.புவனேந்திரன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

மடு பிரதேசப் பொறுப்பாளர் திரு. கில்மன், பள்ளமடு பிரதேசப்பொறுப்பாளர் திரு. சாம், பூநகரி பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரமேஷ், மன்னார் மாவட்டப்பொறுப்பாளர் திரு. சுரேஷ் உட்பட பல முன்னணிப் பிரமுகர்கள் இந்த வைபவத்தில கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த 5 போராளிகளின் புகழுடல்களும் பூநகரி வாடியடியில் இருந்து முழங்காவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படவும் மன்னார், அடம்பன் மயானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இறுதிச் சடங்குகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த ஐவருக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக பூநகரிப் பகுதியிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சி நகர்ப்பகுதி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே விடுதலைக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன. [இ-76-ரி]


வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி "ஷப்றா"

நிலையான வைப்பு

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613,250 | 14,832,400 | 13,700,000 |
| வங்கி மீதிகள் | 10,911,712 | 3,189,084 | 1,894,245 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,310,887 | 23,173,830 | 23,708,680 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775,100 | 1,508,110 |

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. - பதிவு இல. NBS / R/90/021

பணிப்பாளர் சபை

எஸ். பி. ட. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதவான். (தலைவர்)

எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்

ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்

ஏ. எம். எச். பரி.
B. A. (Hons.)

ஆர். பாலசுப்பிரமணியம்.

மேலதிக விவரங்களைப் பெற

ஷப்றா

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

61, நியூ புல்லர்ஸ்வீதி, கொழும்பு - 4

207, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
வீதிவேலைப் பொருள்களுக்கான
கூறுவிலை அறிவித்தல்-1991

வீதிவேலைப் பொருள்களுக்கான கேள்விப் படிவங்களை வழங்கும் தினமும், ஏற்றுக் கொள்ளும் தினமும் கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

1. கேள்விப் படிவங்களை வழங்கும் திகதி 27-02-91 ந. ப. 12-00 மணிவரை
2. கேள்விப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் திகதி 01-03-91 ந. ப. 12-00 மணிவரை

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 18-02-1991 [சி-5787]



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ். கிளை
பாதிக்கப்பட்டவர்களுக்கான
இலவச பயிற்சி

எமது சங்கத்தால் 25 - 02 - 91 இல் ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் / ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்துப் பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் பின்வரும் நிலையில் உள்ளவர்கள் தகுந்த ஆவணங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

1. யுத்த நிலை காரணமாக குடும்பத்தலைவனை இழந்த குடும்பத்தின் அங்கத்தினர்.
2. ஜெய்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்கள்.

தகைமை - ஜி. சி. ஈ. [ஒ எல்] தமிழ் / ஆங்கிலம் [விசேட சித்தியுடன்]

தலைவர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி-5791]



விடுதலை எங்கே?

ஏன் தேசம் அழிகிறது?
ஆண்டவன் இதை காணவில்லையோ?
சமாதானம் விடுதலை கிடையாதா?
இக்கேள்விகளுக்குப் பதில் காணவாருங்கள்
தேவ கிருபை பெறுங்கள்.

இயேசு ஜீவிக்கிறார்
சுவிசேஷ மகாநாடு

உயிரோடு போராடும் மனுக்குலமே,
வேதனை, வறுமை, கண்ணீர், தீராதநோய்
இவைகளில் சிக்குண்டு விடுதலையின்றி
தவிக்கிறீர்களா,

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம்: ரத்னம் விளையாட்டரங்கு,
கொட்டாஞ்சேனை.
[செல்வமஹால் படமாளிகைக்கு அருகில்]

காலம்: 1991 பங்குனி 10 முதல்
17 வரை மாலை 5-30 மணி

செய்தி: சகோதரர் செ. இராஜேந்திரம்

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.
★ வாருங்கள் தேவ ஆசீர்வாதம் பெறுங்கள் ★
பிரவேசம் இலவசம். இயேசு ஜீவிக்கிறார்.

த: பெ. இல. 1044,
கொழும்பு.

[15672]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடுடலக்களுக்கு

## மக்கள் அஞ்சலி

ள்

வத்தலை
ந்திரன்
லிக் கூட்

பொறுப்
, பள்ள
ப்பாளர்
ரதேசப்
ரமேஷ்,
பொறுப்
உட்பட
முகர்கள்
கலந்து
அஞ்சலி

ளிகளின்
ரி வா ௳
முங்காவி

லுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படவும் மன்னார், அடம்பன் மயானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இறுதிச் சடங்குகள் நடைபெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த இவருக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக பூநகரிப் பகுதியிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சி நகர்ப்பகுதி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே விடுதலைக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன. [இ-76-சி]

---


ற்கு

# “ப் றா”

லயான வைப்பு

| | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| | — | 17% |
| | — | 18% |
| | 18% | 20% |
| | 21% | 23% |
| | 22% | 24% |

நிதி நிலை விவரம்

| | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|
| 4 | 14,354,927 | 23,306,910 |
| 2 | 110,897,760 | 116,890,354 |
| 4 | 6,539,639 | 11,364,064 |
| 0 | 14,832,400 | 13,700,000 |
| 2 | 3,189,084 | 1,894,245 |
| 7 | 143,822,862 | 162,239,787 |
| 7 | 23,173,830 | 23,700,680 |
| 5 | 20,025,480 | 20,833,024 |
| 2 | 3,148,350 | 2,867,656 |
| | 1,775,100 | 1,508,110 |

கம்பனிச் சட்டத்தின்
வு இல. NBS / R/90/021

மை

ஏ. எம். எச். பரீ.
B. A. (Hons.)
ஆர். பாலசுப்பிரமணியம்.

## றா

ன்ஸ் லிமிட்டெட்,
07, மின்சார நிலைய வீதி,
ாழ்ப்பாணம்.


---


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை அறிவித்தல்-1991

வீதிவேலைப் பொருள்களுக்கான கேள்விப் படிவங்களை வழங்கும் தினமும், ஏற்றுக் கொள்ளும் தினமும் கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

1. கேள்விப் படிவங்களை வழங்கும் திகதி 27-02-91 ந. ப. 12-00 மணிவரை
2. கேள்விப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் திகதி 01-03-91 ந. ப. 12-00 மணிவரை

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 18-02-1991 [சி-5787]


---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் – யாழ். பிரிவு

பாதிக்கப்பட்டவர்களுக்கான

## இலவச பயிற்சி

எமது சங்கத்தால் 25 – 02 – 91 இல் ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் / ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்துப் பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் பின்வரும் நிலையில் உள்ளவர்கள் தகுந்த ஆவணங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

1. யுத்த நிலை காரணமாக குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தின் அங்கத்தினர்.
2. ஜெய்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்கள்.

தகைமை – ஜி. சி. ஈ. [ஓ எல்] தமிழ் / ஆங்கிலம் [விசேட சித்தியுடன்]

தலைவர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி-5791]


---


## விடுதலை எங்கே?

ஏன் தேசம் அழிகிறது?
ஆண்டவன் இதை காணவில்லையோ?
சமாதானம் விடுதலை கிடையாதா?
இக்கேள்விகளுக்குப் பதில் காணவாருங்கள்
தேவ கிருபை பெறுங்கள்.

### இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ மகாநாடு

உயிரோடு போராடும் மனுக்குலமே,
வேதனை, வறுமை, கண்ணீர், தீராதநோய்
இவைகளில் சிக்குண்டு விடுதலையின்றி
தவிக்கிறீர்களா,

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம்: ரத்னம் விளையாட்டரங்கு, கொட்டாஞ்சேனை.
[செல்வமஹால் படமாளிகைக்கு அருகில்]

காலம்: 1991 பங்குனி 10 முதல்
17 வரை மாலை 5-30 மணி

செய்தி: சகோதரர் செ. இராஜேந்திரம்

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.
★ வாருங்கள் தேவ ஆசீர்வாதம் பெறுங்கள் ★
பிரவேசம் இலவசம். இயேசு ஜீவிக்கிறார்.

த. பெ. இல. 1044,
கொழும்பு.
[15872]


---


ஸ்ரீராமகிருஷ்ணர் - விவேகானந்த

## இளைஞர் மகாநாடு

இடம்: ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் - பருத்தித்துறை

திகதி: 23-02-91 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம்.

தொடக்க உரை: டாக்டர் மு. க. முருகானந்தன் M. B Bs. (Cey)

சிறப்புரை: திரு. வை. கா. சிவப்பிரகாசம் [M.A] [அதிபர், கோப்பாய் ஆசிரிய-கலாசாலை.]

விடயம்: இந்துமதமும், ஸ்ரீராமகிருஷ்ணரும் ஆய்வுரை. சுவாமி சித்ரூபானந்தா

விடயம்: ''ஸ்ரீ ராமகிருஷ்ண – விவேகானந்த இயக்கம்''

[சி-5754]


---


## கலை வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

90, 91, 92 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | S. வரதராஜன் |
| வர்த்தகம் | — | இ. இரட்ணம் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| இந்து நாகரீகம் | — | ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | குழந்தை |

91 A/L வினா-விடை வகுப்பு
வர்த்தகம் – Sat, Sun. 1.00 - 2.00
ஆரம்பம்: 24 – 02 – 1991 1 மணி
[சி-5793]


---


இப்போது விற்பனையாகிறது!

## ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி

பேராசிரியர் த. இராமதாஸ் எழுதியது

★ சுகாதார சேவையாளருக்குச் சிறந்த வழிகாட்டி.
★ மாணவர்களின் மேலதிக அறிவுக்குத் தோழன்.
★ சகல தரப்பு மக்களும், தமக்கும் தமது குழந்தைகளுக்கும் நோய் வராமல் தடுத்துக் கொள்வதற்குச் செய்யவேண்டிய வழிமுறைகளைக் கூறும் அரிய கைநூல்.

[முதலாவது பதிப்பு முற்றாக முடிந்துவிட்டது; இது இரண்டாவது பதிப்பு]

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய சுகாதார நூல்

சுகவாழ்வே பெருவாழ்வு!

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூபா 45/–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேசிய பயிர் பனை

பனங்கள்ளை மாற்று உணவுப் பொருள்களாக்குவது குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பனங்கள்ளை மதுவாகப் பயன்படுத்துவதைக் குறைத்து, எல்லோரும் பாவிக்கும் உணவுப் பொருள்களாக உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுதலையே அது குறிக்கிறது.

பனையின் சகல பயன்பாடுகளையும் அறிந்து, அவற்றை எமதாக்கிக் கொண்டால் அதனை தமிழ் பிரதேசத்தின் முக்கிய பொருளியல் ஆதாரங்களில் ஒன்றாக்கிக் கொள்ளலாம். ஆனால் இதுவரையில் அத்திசையில் உரிய வழியில் சரியாக அடியெடுத்து வைக்கப்படவில்லை என்றே சொல்லலாம்.

நீண்டகாலமாக பனையின் பயன்களைத் தக்கபடி பாவித்துக் கொள்வதன் அவசியம் குறித்துப் பல சந்தர்ப்பங்களிலும், பல மட்டங்களிலும் பேசப்பட்டும், எழுதப்பட்டு வந்தாலும் செயலளவில் இன்னும் ஆரம்பக்கட்டத்திலேயே உள்ளோம்.

எனவே பனையை யாழ்ப்பாணக் குடாநாட்டின் தேசியப் பயிராகப் பிரகடனம் செய்து, அதன் முழுப் பயனையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட வேண்டும்.

பனை தரும் முழுப் பயன்களும் எவை. அவற்றை இனங்காணவும், கையில் பெறவும் என்ன நடவடிக்கைகள் தேவை? பனை நல்கும் பழம், ஓலை, மட்டை, தண்டு, உள்ளே இருக்கும் சோத்தி, வேர், கள்ளு, நார், தும்பு உட்பட சகல பலன்களும விவசாயத் திட்டங்களாகவும், கைத்தொழில் திட்டங்களாகவும் வகுக்கப்பட வேண்டும். ஓர் உற்பத்திப் பொருளில் இருந்து உப உற்பத்திப் பொருளைப் பெறக்கூடிய தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

எனவே பனையைத் தேசியப் பயிராகவும், பெருந்தோட்டப் பயிராகவும் கொண்டு அதன் பயன்களைப் பூரணமாகப் பெறுவதற்கு ஒன்றிணைக்கப்பட்ட கொள்கையும், திட்டங்களும் அவசியம் அப்போது தான் கள்ளை மாற்று உணவுப் பொருள்களாக்குவதோடு மட்டும் நிற்காமல் ஏனைய பயன்களையும் பெருக்கிக்கொள்ளலாம்.

பனை யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு இயற்கை தந்த அரும் பெரும் செல்வம். நிலைத்த பெருநிதி. பஞ்சம் போக்கும் பல்முக விருட்சம் அதனை அதிக அளவில் பயிரிட்டும், அது நல்கும் சகல பயன்களையும் முற்றாகத் கைக்கு வரப் பெற்றும் தமிழர்கள் தமது பலவித தேவைகளையும் பூர்த்திசெய்யலாம். அந்த உணர்வும், பனை வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான உழைப்பும் சகல தரப்பு மக்களிடமும் இருந்தும் உதிக்க வேண்டும்.

# புலிகளுக்காக சட்டத்தரணி ஆஜராவதை தடுக்க முடியாது

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சமீபத்தில் தமிழகத்தில் கைதான தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக சட்டத்தரணி ஒருவர் ஆஜராவதைத் தடை செய்ய வேண்டும் என்று மாநில அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் பணிப்புரை ஒன்றை வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்காக தாம் ஆஜராவதை பொலீஸார் தடுத்து வருவதாகவும்—

தனது சுதந்திரத்தில் அதிகாரத்தில் உள்ளவர்கள் தலையிடுவதைத் தடுக்கக்கோரியும் சட்டத்தரணி டி. வீரசேகரன் என்பவர் தாக்கல் செய்த மனு தொடர்பாக நீதிபதி கே. எஸ். பக்தவத்சலம் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

ஈழத் தமிழ் அகதிகளான தனது கட்சிக்காரர்களை, சந்திக்க தான் புதுக்கோட்டை சென்றபோது பொலீஸார் தம்மைத் தடுத்து விட்டனர் என்றும்—

பின்னர் தன்னைக் கைது செய்து திருவல்லிக்கேணி, அண்ணாசாலை பொலீஸ் நிலையங்களுக்குக் கூட்டிச் சென்று விசாரித்த பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்து பிணையில் விட்டதாகவும் வீரசேகரன் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

''மனுதாரரை அதிகாரத்தில் உள்ளவர்கள் விசாரிக்க விரும்பினால் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையில் விசாரிக்கலாம்''— என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். [உ-3]

கடந்த ஜூனுக்குப் பின்னர்

# இறந்தோர் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

கடந்த ஜூன் மாதத்துக்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் வழங்கப்பட இருக்கின்றன.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு கடும் பாதிப்புற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட இருக்கிறது.

ஈமக்கிரியைச் செலவுக்கான கொடுப்பனவு பெற்றவர்களுக்கே முதலில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவிருக்கிறது.

இது சம்பந்தமாக சுற்று நிருபம் ஒன்று உதவி அரசாங்க அதிபர்களுக்கு செயலகப் புனர்வாழ்வுப் பிரிவால் அனுப்பப்பட்டுள்ளது. [ஐ-3]

# அரச உடைமை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களே இதுவாகும்.

இந்த மதிப்பீட்டில் வலி. வடக்கு, தீவுப்பகுதி ஆகிய இடங்களில் உள்ள அரச உடைமைகள், யாழ். போதனா ஆஸ்பத்திரி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் திணைக்களத்திற்கு கீழ்வரும் ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் சேர்க்கப்படவில்லை.

இவற்றுக்கு ஏற்பட்ட சேதம் மேலும் ஐம்பது கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தனியார் நிறுவனங்கள், பொது மக்களின் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட அழிவு இந்தத் தொகையை விட பல மடங்கு அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இது தவிர, இராணுவ நடவடிக்கைகளினால் விவசாயம், கைத்தொழில் போன்ற செயல் முயற்சிகளில் ஏற்பட்ட நஷ்டம் பல நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்களைத் தாண்டும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

முக்கிய சில திணைக்களங்களும் அவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களும் [ரூபாய்களில்] வருமாறு :-

| | |
|---|---|
| ★ செயலகம் | — 13½ லட்சம் |
| ★ வீடமைப்புத் திணைக்களம் | — 2½ லட்சம் |
| ★ வீதி அமைப்புத் திணைக்களம் | — 1½ லட்சம் |
| ★ வீதி அதிகாரசபை | — 20 லட்சம் |
| ★ கூட்டுறவுத் திணைக்களம் [ப. நோ. கூ. ச. உட்பட] | — 7கோடி 72 லட்சம் |
| ★ வீடமைப்பு அதிகாரசபை | — 23½ லட்சம் |
| ★ நீர் வள அதிகாரசபை | — 98 லட்சம் |
| ★ சமநலசேவைத் திணைக்களம் | — 10 லட்சம் |
| ★ தபால் திணைக்களம் | — 40 லட்சம் |
| ★ பனை அபிவிருத்தி சபை | — 1 லட்சம் |
| ★ மின்சார சபை | — 3 கோடி 33½ லட்சம் |
| ★ இலங்கை வங்கி | — 11¾ லட்சம் |
| ★ யாழ். மாநகர சபை | — 15 கோடி 60 லட்சம் |
| ★ உள்ளூராட்சித் திணைக்களம் | — 37 லட்சம் |
| ★ ரயில்வே திணைக்களம் | — 1 கோடி 63 லட்சம் |
| ★ மக்கள் வங்கி | — 40 லட்சம் |
| ★ கல்வித் திணைக்களம் | — 8 கோடி 90 லட்சம் |
| ★ விவசாயத் திணைக்களம் | — 1 கோடி |
| ★ விவசாய விஸ்தரிப்புத் திணைக்களம் | — 67 லட்சம் |
| ★ ப. பி. போ. சபை | — 5 கோடி 61 லட்சம் |

# சந்திரசேகர் - தேவிலால் கருத்து வேறுபாடு?

இந்தியப்பிரதமர் சந்திரசேகருக்கும் துணைப் பிரதமர் தேவிலாலுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

திரு. தேவிலால் — இந்திரா காங்கிரஸில் சேரக்கூடும் என்றும் புதுடில்லியில் பரவலாக பேச்சடிபடுகிறது.

தேவிலால் காங்கிரஸுடன் இணைந்தால், இந்திய அரசியலில் பெரும் குழப்பநிலை ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்று அவதானிகள் தெரிவித்தனர். [ஓ-எ]

# காங்கிரஸில் இணைவதா? பேச்சுக்கே இடமில்லை

## தேவிலால் உறுதியாகக் கூறுகிறார்

இந்திரா காங்கிரஸ் கட்சியில் தாம் சேருவதற்கான பேச்சுக்கே இடமில்லை என்று துணைப் பிரதமர் தேவிலால் நேற்றுச் சொன்னார்.

புதுடில்லியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தேவிலால் இதனைத் தெரிவித்தார்.

ஜனதாதள் [எஸ்] கட்சியில் உள்ள ஒரு பிரிவினரின் ஆதரவோடு காங்கிரஸ் கட்சி ஆட்சிக்குவர முடியுமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

''முடிந்த முடிவாக எதுவும் சொல்வதற்கு இல்லை'' என்றும் திரு. தேவிலால் தெரிவித்தார்.

ஒரு தேசிய அரசு அமைக்கப்படுவதை தான் ஆதரிப்பதாக தெரிவித்த திரு. தேவிலால், ஜனதாதள [எஸ்] கட்சியில் இருந்து அதிருப்தியாளர்கள் வெளியேறுவதற்குத் தாம் ஊக்கமளிப்பதாகக் கூறப்படுவதை மறுத்தார். [-எ]

# நெற்பயிர் எரித்து நாசம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பூமரத்தடிச்சேனை என்ற இடத்தில் அறுவடை செய்யக்கூடிய நிலையில் விளைந்திருந்த பத்து ஏக்கர் நெல்வயலை கடந்த சனியன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எரித்து நாசம் செய்துள்ளனர்.

அதேசமயம் வயலில் வேலை செய்த ஆறுபேர் படையினரால் துன்புறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# பத்திரிகையாளர் தப்பினர்

பன்னாட்டுப் படைகளின் குண்டு வீச்சுத் தாக்குதலில் இருந்து சர்வதேச பத்திரிகையாளர்கள் 44 பேர் தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டனர்.

பக்தாத் நகரின் மத்தியில் உள்ள அல்—ரஷித் ஹோட்டலில் இந்தப் பத்திரிகையாளர்கள் தங்கியிருந்தனர்.

அந்த ஹோட்டல் திங்கள் இரவு குண்டு வீச்சுக்கு இலக்கானது.

பத்திரிகையாளர்கள் உடனடியாக ஹோட்டலின் அடித்தளத்தில் உள்ள பாதுகாப்பு நில அறைக்கு அழைத்து செல்லப்பட்டனர். [ஓ-எ]

# எண்ணெய் விலை விழும்!

வளைகுடா யுத்தம் முடிவடைந்த பின்னர் மசகு எண்ணெய்யின் விலை உலக சந்தையில் ஒரு பீப்பாய் 10 டொலராக வீழ்ச்சியடையலாம் என எண்ணெய் உற்பத்தி நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

எண்ணெய் மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு கையிருப்பில் வைக்கப்பட்டிருப்பதே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சதாம் மயிரிழையில் தப்பினார்!

வளைகுடாப் போரின் ஒரு கட்டத்தில் பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய வான் தாக்குதலில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் மயிரிழையில் உயிர் தப்பினார் என்று லண்டன் சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டது.

# அதிபர், ஆசிரியர்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

முருங்கன் மகாவித்தியாலய அதிபரான எஸ். யோசப் அப்பாடசாலை ஆசிரியரான நவரட்ணம் ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

செபமாலை [முருங்கன் ம.வி] பிம்போபுள்ளே குளோஸ் [வங்காலை ஆசிரியர்] ஜஸ்டின் [புதுக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர்] ஆகியோரே கைதான மூன்று ஆசிரியர்களுமாவர். [உ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சிக் கடலில் கடற்படை அட்டகாசம்

வல்வெட்டித்துறை, பெப். 21

வடமராட்சி கடற்பிராந்தியத்தில் கடந்த சில தினங்களாக கடற்படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

பீரங்கிப் படகுகளில் இருந்து இடையிடையே கரையோரப் பகுதிகளைநோக்கி தாக்குதல் நடத்தப்படுகிறது.

நேற்று முன்தினம் கடலுக்குச் சென்ற தொழிலாளர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். மற்றொரு பகுதியில் மீனவர்களை நேர்க்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அவர்கள் கடலில் பாய்ந்து தப்பிக் கரை சேர்ந்தனர்.

சி. தங்கராசா[24 வயது] காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-160-15]

# ஈழ அகதி முகாம்களுக்கு தமிழக ஆளுநர் விஜயம்

சென்னை, பெப். 21

இலங்கையில் சகஜ நிலை திரும்பிய பின்னர் தமிழ்நாட்டில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ அகதிகள் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்லலாம்.

தமிழ் நாடு மாநில ஆளுநர் பீஷ்மன் நாராயண சிங் நேற்று முன்கண்டவாறு தெரிவித்தார்.

மண்டபம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழ்அகதி முகாம்களைப் பார்வையிட்ட பின்னர் ஆளுநர் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

ஆளுநர் மேலும் சொன்னதாவது;-

அகதிகளுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அவர்கள் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

70 இலங்கைத் தமிழ்ப் போராளிகள் ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களில் 36பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். - என்றார். [ஒ-எ]

# போலியோ தடுப்பு மருந்து வந்துவிட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

கப்பலில் கொண்டுவரப்பட்ட 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான போலியோ தடுப்பூசி மருந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தது.

இதில் ஆயிரம் சி.சி மருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டது.

ஏனைய பிராந்திய வைத்தியசாலைகளுக்குக்கும் இன்று அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் தமது பகுதிகளில் உள்ள அரச வைத்தியசாலைகளிலும் தாய், சேய் நல பிரிவுகளிலும் தடுப்பு மருந்தை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-15]

# இராசலிங்கம் காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 21

உடுப்பிட்டித்தொகுதி முன்னாள் எம்.பி. திரு. த. இராசலிங்கம் நேற்றுக் காலமானார்.

இவர் நோய்வாய்ப்பட்டு கடந்த ஒரு வார காலமாக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எம்.ஏ. பட்டதாரியான திரு. இராசலிங்கம், முன்னாள் கல்வி அதிகாரியும் ஆவார். [ஒ-15]

# இந்திய அமைதி...

[ 1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

வடபகுதி தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திய அரசியலிலும், நாட்டுமக்கள் மத்தியிலும் பிராந்தியத்திலும் இந்தியா தனது நம்பகத் தன்மையை இழக்க இது வழிவகுத்தது என்றும் அவர் சொன்னார்.

இந்தியாவின் பாதுகாப்புவார இதழான 'இன்டியன் டிபென்ஸ் ரிவியூ'வில் எழுதிய கட்டுரையில் முன்கண்ட விவரங்கள் வெளியாகின.

எந்த அடிப்படையில் இந்தியப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது என்பது புதிராக உள்ளதாகவும் அவர் அக்கட்டுரையில் கூறியிருக்கிறார்.

இந்திய அமைதிப்படையின் இலங்கை நடவடிக்கை முழுத் தோல்வியாகும் என்றும் அவர் தெரிவித்தார். [ஒ-எ]

# தமிழ் மொழி தினப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். கோட்டப் பிரிவு பாடசாலைகளின் தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று முதல் சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று தினங்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப் போட்டிகளில் 60 பாடசாலைகளுக்கு மேல் பங்கு கொள்ளவுள்ளன. யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா இன்று காலை 8-30 மணிக்கு போட்டிகளை ஆரம்பித்து வைப்பார். [இ]

# இணக்கமன்று கைநூல்

யாழ்ப்பாணம், பெப். 21

''தமிழீழ இணக்க மன்று அமைப்பு விதியும் ஒழுங்கு விதிகளும்'' என்ற கைநூல் தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவின் தலைமை செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இணக்க மன்றுச் செயலாளர், பொறுப்பாளர் பிரிவு நீதி நிர்வாகப் பொறுப்பாளர், மாவட்ட நீதி நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோரிடம் கைநூலைப் பெற்றுக் கொள்ளலாம். [ஒ]

# வீர மரணம்

யாழ்ப்பாணம், பெப். 21

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினருடன் கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆனந்தராஜ் என்ற போராளியும் வீரமரணமடைந்தார். [உ]

# ஓய்வூதியருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 21

இலங்கை வங்கி மானிப்பாய் கிளைமூலம் ஓய்வூதியம் பெறுவோரில்—நவம்பர மாத ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள்—உடனடியாக இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஒ]

# ஈழபோராளிகள் அறுவர் கைது

சென்னை, பெப்.21

தமிழ்நாடு, வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாலஜாபேட்டை நகரில் ஆறு இலங்கைத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

அவர்களிடமிருந்து சக்தி மிகுந்த வானொலித் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பொலீஸார் கைப்பற்றினர் என்றும் அச் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ]

# ஸ்ரான்லி வீதி வங்கியில் நிவாரண கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.21

இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை மறுதினம் சனிக்கிழமை மீளக் குடியமர்தல் 2 ஆம் கட்ட நிவாரணம் [ரூ.1,000], உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடை [ரூ.4000] ஆகிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு பெறத் தவறியர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளும், குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ ஜே/49 வண். மேற்கு—54

★ ஜே/50 வண். வடகிழக்கு—32

★ ஜே/51 கந்தர்மடம்—66

ரூ. 4 ஆயிரம் பெறவுள்ள கி. சே. பிரிவுகளும் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ ஜே/49 வண். மேற்கு—59

★ ஜே/ஜ51-கந்தர்மடம்—10. [ஓ]

மூன்று குழந்தைகளுடன்

# விடுதலைப் போரில் தன்னை இணைத்த இளம் தாய்!

புளியங்கூடல், பெப். 21

இளம் தாய் ஒருவர் தன்னையும், தனது மூன்று குழந்தைகளையும் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்ட உணர்வுபூர்வமான நிகழ்வு ஒன்று ஊர்காவற்றுறைப் பகுதியில் நடந்துள்ளது.

அந்த விடுதலை உணர்வு பொங்கும் வீரத்தாய் கரம்பன் கிழக்கைச் சேர்ந்தவர். பெயர் விஜயலஷ்மி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகளின் பாசறை ஒன்றுக்குச் சென்றார். தமது 6 வயதான நிரோஷன், றொஷால் ஆகிய ஆண் குழந்தைகளோடும், ஒன்றரை வயதான நிஷாந்தினி என்ற பிஞ்சு மகளோடும் அவர் அங்கு சென்றார்.

தன்னையும் தமது பிஞ்சுக் குழந்தைகளையும் விடுதலைப் போராட்டத்தில் சேர்க்குமாறு பாசறைப் பொறுப்பாளரைக் கேட்டுக் கொண்டார்.

பயிற்சி பெற்று ஆயுதம் ஏந்த வேண்டும் என்று தமது ஆவலை நிறைவேற்றுமாறு உணர்ச்சி பொங்க வேண்டுகோள் விடுத்தார்.

தீவக மகளிர் முன்னணியின் பொறுப்பாளர் அந்த இளம் தாயின் தியாகத்தைப் பாராட்டி அவரையும், மூன்று குழந்தைகளையும் பொறுப்பேற்றுக்கொண்டார். [அ-120]

# ஆசிரியர்களின் வரவை கண்காணிக்க நடவடிக்கை

ஆசிரியர்களின் வரவைக் கண்காணிக்க அதிகாரிகள் குழு, பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் மேற்கொள்ள இருக்கிறது.

இந்தத் தகவலை யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் குறித்து யாழ். கல்வி அலுவலகத்துக்குக் கிடைத்துள்ள புகார்களை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக கல்விப் பணிப்பாளர் மேலும் சொன்னார். [ஒ-3]

# புஷ், மேஜர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யான அம்சம் சோவியத்தின் சமாதானத் திட்டத்தில் இடம்பெறவில்லை என்று தாம் வெளிப்படையாகவே திரு. கோர்பச்சேவிடம் தெரிவித்து விட்டதாக ஜனாதிபதி புஷ் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருமளவுக்கு சோவியத்தின் சமரச யோசனையில் ஆக்கபூர்வமாக ஏதும் குறிப்பிடப்படவில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் சொன்னார்0

# தொண்டர் ஆசிரியர் நியமனம்

கொழும்பு. பெப். 21

தொண்டர் ஆசிரியர்களாக கடந்த டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓராண்டு காலம் பணியாற்றியவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்தார்.

தெஹிவளையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியபோது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். [இ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org